# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# வர்த்தமானப் பத்திரிகை

## *2017 ஆம் ஆண்டு யூலை மாதம் 07 ஆம் திகதிய*
## *பகுதி II இற்குக் குறைநிரப்பி*

*(2017.07.10 ஆம் திகதியன்று வெளியிடப்பட்டது)*

## *மாகாண சபைத் தேர்தல்கள் (திருத்தம்)*

***1988 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, மாகாண சபைத் தேர்தல்கள் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்***

*மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் அவர்களினால் பிரசுரிக்கப்படுமாறு பணிக்கப்பட்டது*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 6.00** **தபாற் செலவு : ரூபா 10.00**

### சட்டப்பயன் பற்றிய கூற்று

**வாசகம் 2**: இவ்வாசகம், (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1988 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, மாகாண சபைத் தேர்தல்கள் சட்டத்தின் 10 ஆம் பிரிவினைத் திருத்துகின்றது என்பதுடன், திருத்தப்பட்டவாறான இப்பிரிவின் சட்டப்பயனானது நியமனப்பத்திரம் ஒன்றில் உள்ளடக்கப்படவேண்டிய பெண் வேட்பாளர்களின் எண்ணிக்கையைக் குறித்துரைப்பதற்காகும்.

**வாசகம் 3**: இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 13 ஆம் பிரிவினைத் திருத்துகின்றதென்பதுடன், திருத்தப்பட்டவாறான இப்பிரிவின் சட்டப்பயனானது, நியமனப்பத்திரம் ஒன்றில் உள்ளடக்கப்படவேண்டிய மொத்த எண்ணிக்கையினரான வேட்பாளர்களில் முப்பது சதவீதத்திற்கு குறைவாக பெண் வேட்பாளர்களை உள்ளடக்குவதற்காகும்.

**வாசகம் 4** : இவ்வாசகம்,முதன்மைச் சட்டவாக்கத்தின் 13 ஆம் பிரிவினைத் திருத்துகின்றதென்பதுடன் திருத்தப்பட்டவாறான இப்பிரிவின் சட்டப்பயனானது பெயர்குறித்து நியமிக்கப்படுவதற்கு தேவைப்படும் பெண் வேட்பாளர்களின் எண்ணிக்கையை கொண்டிராத ஏதேனும் நியமனப்பத்திரத்தை நிராகரிப்பதற்காகும்.

ச.வ.ஓ. 30/2015

**1988 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, மாகாண சபைத் தேர்தல்கள் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்.**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

*சுருக்கப் பெயர்.*

**1.** இச்சட்டம், 2017 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, மாகாண சபைத் தேர்தல்கள் (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

*1988 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, சட்டத்தின் 10 ஆம் பிரிவினைத் திருத்துதல்.*

**2.** (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1988 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, மாகாண சபைத் தேர்தல்கள் சட்டத்தின் 10 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் "நியமனப்பத்திரத்தில் தரப்படவேண்டிய 13 (1) ஆம் பிரிவின்கீழ் தேவைப்படுத்தப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கையையும்" என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக "நியமனப்பத்திரத்தில் தரப்படவேண்டிய 13(1) ஆம் பிரிவின்கீழ் தேவைப்படுத்தப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கையையும் மற்றும் 13(1அ) ஆம் பிரிவின் கீழ் தேவைப்படுத்தப்பட்ட பெண் வேட்பாளர்களின் எண்ணிக்கையையும்" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 13ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**3.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 13ஆம் பிரிவானது, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவினை உடனடுத்துப் பின்வரும் உட்பிரிவுகளைச் சேர்ப்பதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

"(1அ) இச்சட்டத்தின் ஏதேனும் ஏற்பாட்டில் முரணாக உள்ளது எது எப்படியிருப்பினும் ஒவ்வொரு நியமனப் பத்திரமும் (1) ஆம் உட்பிரிவின் கீழ் சமர்ப்பிக்கப்பட்ட ஒவ்வொரு நியமனப்பத்திரத்திலும் பெயர் காணப்படுகின்ற மொத்த வேட்பாளர்களின் எண்ணிக்கையில் முப்பது சதவீதத்திற்குக் குறையாமல் பெண் வேட்பாளர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(1ஆ) அவ்வாறு பெயர்குறித்து நியமிக்கப்பட்ட பெண் வேட்பாளர்களின் மொத்த எண்ணிக்கையானது அவ்வெண்ணிக்கையின் முப்பது சதவீதம், முழு

எண்ணாகவும் பின்னமாகவும் இருக்கின்றவகையாக இருக்குமிடத்து, அம் முழு எண் மற்றும் பின்னத்திற்குக் கிட்டியதான முழு எண் இப்பிரிவின் நோக்கத்திற்காக முப்பது சதவீதமாக இருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும்.”.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 17 ஆம் பிரிவினைத் திருத்துதல்.*

**4**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 17ஆம் பிரிவானது, அதன் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் “பெயர்குறித்து நியமிக்கப்பட வேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்ட” என்னும் சொற்களுக்குப் பதிலாக ‘‘பெயர்குறித்து நியமிக்கப்பட வேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்ட பெண் வேட்பாளர்களின் எண்ணிக்கை உட்பட தேவைப்படுத்தப்பட்ட” என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*ஒவ்வாமை ஏற்படும் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**5**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும்பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்